முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.
அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 16வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | வயது | : | 47 |
| தந்தை/கணவர் பெயர் | : | சாமியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் காட்டுமன்னார்குடி தாலுக்கா, அருண்மொழித்தேவன் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்து போன சுரேஷ் என்பவரை எனக்குத் தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நான் கடலூர் மத்திய சிறைச்சாலையில் கைதியாக இருந்தேன். எனக்கு உடல்நிலை சரியில்லாததால் என்னை கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அங்கே காவல் அதிகாரிகளும் இருந்தார்கள். சுரேஷ் என்பவரும் உடம்பு சரியில்லை என்று பக்கத்து பெட்டில் இருந்தார். என்னிடம் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தார். நான் ஒரு கொலை வழக்கில் வந்திருக்கிறேன் என்றும், பீடி, சிகரெட் பிடிப்பேன், சரக்கு குடிப்பேன் அதனால் நெஞ்சு வலிக்கிறது என்று என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தார்கள் என்று சொன்னார். வேறு எதுவும் சொல்லவில்லை. நான் 5, 6 நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன்.

எனக்கு உயர் நீதிமன்றத்தில் ஜாமின் கிடைத்ததால் நான் அங்கிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டேன். ஏற்கனவே இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் எண் 2 அவர்களிடம் சாட்சியம் அளித்துள்ளேன். போலிசார் என்னை விசாரித்தனர். என்னை வேறு யாரும் விசாரிக்கவில்லை.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நானும் இறந்த சுரேஷ் என்பவரும் மருத்துவமனையில் பக்கத்து பக்கத்து அறையில் இருந்தோம்.

**3,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 17வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | தேகசூரான் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் கடந்த 31.10.2012 அன்று உதவி சிறை அலுவலராக இருந்து பணி ஓய்வு பெற்றேன். 05.03.2011 அன்று அதிகாலை சுமார் 02.30 மணிக்கு வடலூரிலிருந்து இரண்டு கைதிகளை சிறைக்கு கொண்டு வந்தார்கள். அப்போது நான் சிறையில் இரவு அட்மினிஷன் ஆபிசராக இருந்தேன். இரண்டு கைதிகளில் ஒருவர் பெயர், விலாசம் தெரிந்து உள்ளே அனுமதி செய்தேன். இன்னொரு கைதி சுரேஷ் என்பவர் உட்கார்ந்தவர் உட்கார்ந்தே இருந்தார். அவரிடம் அங்க அடையாளம் கேட்ட போது அவரால் எழுந்திருக்கவே முடியவில்லை. இன்னொரு சிறைவாசியை விட்டு சுரேஷ் சட்டையை கழற்ற சொல்லி அங்க அடையாளங்களை அவர் சொல்ல நான் பதிவு செய்தேன். அவரிடம் ஏன் பேசமாட்டேன் என்று சொல்கிறாய் என்று கேட்டேன். அவர் சட்டையை கழற்றிய போது உடலை சுற்றி பார்த்தேன். கை, கால்களில் அடிப்பட்டு இருந்தது. மார்பில் அடிப்பட்டிருந்தது. உடனே மெடிக்கல் ஆபிசருக்கு தகவல் சொல்லி வர சொல்லி அவர் அனுமதியின் பேரில் உடனே

கடலூர் அரசு மருத்துவமனைக்கு சுரேஷை அனுப்பி வைத்தேன். அதற்காக அவரிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டேன். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. சுரேஷ் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். இது சம்பந்தமாக நீதித்துறை நடுவர் எண் 2, கடலூர் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லியுள்ளேன். ஆர்.டி.ஓ. என்னை விசாரித்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

பொதுவாக நீதிமன்றத்திலிருந்து வரும் ரிமாண்டை பெற்ற பிறகு நான் ரிமாண்ட் ரிஜிஸ்டரில் கைதி என்ன நிலைமையில் இருக்கிறார் என்றும், என்ன சொல்கிறார் என்றும் பதிவு செய்வேன் என்றால் சரிதான். கைதி சுரேஷ் அவர் நிலைமை என்ன என்று ரிஜிஸ்டரில் பதிவு செய்தேன் என்றால் சரிதான். மருத்துவரை வரவழைத்த விவரத்தினையும் அந்த ரிஜிஸ்டரில் பதிவு செய்துள்ளேன். மருத்துவர் வந்து பார்த்த பிறகு கைதி எப்படி இருக்கிறார் என்று புத்தகத்தில் எழுதியுள்ளார் என்றால் மருத்துவர் எழுத மாட்டார், பரிசோதனை செய்த உடன் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்வார். மருத்துவமனைக்கு அனுப்ப நானோ, மருத்துவரோ உத்திரவு போட்டால் தான் அனுப்ப முடியும் என்றால் மருத்துவர்என்னிடம் சொல்வார், நான் பாஸ்போட்டில் கையெழுத்து செய்து மருத்துவமனைக்கு அனுப்புவேன்.

**3,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 8 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் திரு.விஜய் ஆனந்த் தம்பையா | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி –**

நான் தற்போது கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவமனை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். மனித உரிமை ஆணையத்தில் அசல் ஆவணத்தினை அழித்து விட்டதால் அதன் நகல் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ. 13** ஆகும். அதனும் நோயாளிக்கு வழங்கப்பட்ட டயட் ஷீட், மற்றும் அந்த நபருக்கு இரத்த பரிசோதனை செய்த ரிப்போர்ட் தாக்கல் செய்கிறேன். அது **அ.த.சா.ஆ. 14** ஆகும். சுரேஷ் மருத்துவமனை உள்நோயாளியாக இருந்த போது செவிலியர்கள் அவருக்கு வழங்கிய சிகிச்சை குறித்த விவரம் **அ.த.சா.ஆ. 15** ஆகும். உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதி செய்த கேஸ் ஷீட் முதல் பக்கம் **அ.த.சா.ஆ. 16** ஆகும். மருத்துவர் சிவ சுப்ரமணியன் நோயாளிக்கு சிசிச்சை அளித்த விவரங்களின் நகல் **அ.த.சா.ஆ. 17**,

அத்துடன் மருத்துவர் RMO மற்றும் மருத்துவர் கோவிந்தராஜ் சிசிச்சை அளித்த விவரங்களின் நகல், மருத்துவர் ராமலிங்கம் சுரேஷ்க்கு அளித்த டெத் ரிப்போர்ட் நகல், உள்நோயாளியாக சேர்க்கும் போது கொடுக்கப்பட்ட அனுமதி சீட்டு நகல், சிறைச்சாலை மருத்துவர் மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்த சீட்டு நகல் ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

மருத்துவர் ராமலிங்கம் அளித்த டெத் ரிப்போர்ட்டில் இறப்பிற்கான காரணம் Acute Myo cardial infarction & Sudden cardio respiratory arrest due to sudden shock and injuries என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். சிறையிலிருந்து வந்த பரிந்துரை வேண்டுகோள் கடிதத்தில் சுரேஷ் என்பவருக்கு பலவகையான காயங்கள் என்று பொதுவாக குறிப்பிட்டுள்ளார்கள், ஆனால் என்ன என்ன காயங்கள் மற்றும் எந்த வகையான காயங்கள் என்று தனித்தனியாக குறிப்பு இல்லை.

**3,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**